கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
51.	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	*191,43,84*	–	*1*
52.	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	*131,50,24*	*1*	*1*
53.	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	*751,10,57*	*750,00,00*	*1*
54.	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	*184,49,04*	*142,09,64*	–
	பெருமொத்தம்	*53,262,66,01*	*11,439,35,00*	*722,46,18*

5. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை, 2012–2013, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012–2013 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின்முன் வைக்கிறேன். துணை மானியக்*

கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை@ இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள் மொத்தம் 6,113.37 கோடி ரூபாய் அளவிலான நிதியை ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில், 2,417.97 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 3,695.40 கோடி ரூபாய் மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. 2012–2013 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை சட்டமன்றப் பேரவையில் 2012 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29 ஆம் நாளன்று தாக்கல் செய்யப்பட்ட பின்னர், 'புதுப் பணிகள்' மற்றும் 'புதுத் துணைப் பணிகள்' குறித்து ஒப்பளிப்பு செய்யப்பட்ட இனங்களுக்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலைப் பெறுவதும், இத்திட்டங்களுக்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து விடுவிக்கப்பட்ட தொகையினை அந்நிதிக்கு ஈடுசெய்வதும்தான் இந்தத் துணை மானியக் கோரிக்கையின் முக்கிய நோக்கங்களாகும்.

3. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தற்போதைய கடினமான நிதிநிலையைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு 1,000 கோடி ரூபாய் வழி வகை முன்பணமாகவும், 909 கோடி ரூபாய் நீண்டகாலக் கடனாகவும் அனுமதித்துள்ளது. கூடுதல் தேவையான 1,909 கோடி ரூபாய் "மானியக் கோரிக்கை எண் 14, எரிசக்தித் துறை" என்பதன்கீழ் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. 50 சதவீதத்திற்கு மேற்பட்ட பயிர் இழப்பால் பாதிக்கப்பட்டுள்ள காவேரி பாசனப் பகுதி விவசாயிகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு வறட்சி நிவாரணத் தொகுப்பாக 541 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இந்தக் கூடுதல் தொகை "மானியக் கோரிக்கை எண் 51, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு" என்பதன்கீழ் இந்தத் துணை மதிபபீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. நபார்டு வங்கி நிதியுதவியுடன் ஊரகப் பகுதி சாலைகளை மேம்படுத்துவதற்காக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு கூடுதல் தொகையாக 211 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இதற்கான

@ 271 முதல் 277 வரையிலான பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளது.

அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/– “மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை” என்பதன்கீழ் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் செலவிடப்படும்.

முற்பகல் 11–30

6. கிழக்குக் கடற்கரைச் சாலையில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள, தமிழ்நாடு சாலை வளர்ச்சி நிறுவனம் மற்றும் தகவல் தொழில்நுட்ப துரித சாலை நிறுவனம் ஆகியவற்றிற்குக் கடனாக, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு மேலும் 177 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இதற்கான அடையாள நிதியொதுக்கமாக ரூபாய் 1,000/– “மானியக் கோரிக்கை எண் 21–நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை” என்பதன்கீழ் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின்மூலம் ஈடு செய்யப்படும்.

7. முதியோர் ஓய்வூதியம், மாண்புமிகு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் ஏனைய சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்குக் கூடுதலாக 298 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. துணை மதிப்பீடுகளில் ஒவ்வொரு இனத்தின் கீழும் ரூபாய் 1,000/– “மானியக் கோரிக்கை எண் 41 – வருவாய்த் துறை” என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை மானியத்தில் ஏற்படும் மீதத்திலிருந்து மறு நிதியொதுக்கத்தின் மூலம் செலவிடப்படும்.

8. மாவட்டத் தொழில் மையங்களைப் புதுப்பிக்க மாண்புமிகு அம்மா அவர்களது அரசு 50 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இந்நிதியாண்டிற்குத் தேவைப்படும் செலவினங்களுக்காக 2 கோடி ரூபாய் “மானியக் கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை” என்பதன்கீழ் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

9. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுகிறேன். வணக்கம்.

(269ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)
2012–2013 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
1	மாநிலச் சட்டமன்றம்	8	—	—
2	ஆளுநர் மற்றும் அமைச்சரவை	2	—	—
3	நீதி நிருவாகம்	18	—	—
4	ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை	154,39,81	1	18,99
5	வேளாண்மைத் துறை	1,22	191,96,55	29,00
6	கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	135,18,63	2	29,12
7	மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)	11	4	5
8	பால் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை)	2	—	1,36,66
9	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	113,97,24	4	7,05

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
10	வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	13	—	42,99
11	முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை)	34,76,43	—	—
12	கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	68,74,07	2	1,34,04
13	உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை)	17	3	—
14	எரிசக்தித் துறை	4	—	1,908,99,96
15	சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	4,51,80	—	1
16	நிதித் துறை	63,31,69	—	30,65,52
17	கைத்தறி மற்றும் துணி நூல் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	85,14,15	1	5

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை)	8,08,11	—	1
19	மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை	447,26,16	1	18,99
20	உயர் கல்வித் துறை	68,53,72	9	—
21	நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை	7,94,17	19	50,00
22	காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	668,87,80	56,99,99	64,50
23	தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	6	6,42,61	—
24	சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	22,77	1,38,77	—
25	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்— நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	22,47,89	—	—

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
26	வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	101,67,10	7,59,43	54,65
27	தொழில் துறை	4	38,66,67	3
28	செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	6,67,09	—	—
29	சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை)	7,56,54	23,03,22	14,99
30	எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	5,00	24,41	—
31	தகவல் தொழில்நுட்பவியல் துறை	4	—	22,17
32	தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை	28	6,15,71	93,74
33	சட்டத் துறை	3,91,69	—	26,98
34	நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை	27	6	2

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	10,60,95	1,80,99	70,49
36	திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை	8,27,26	4,70,16	22,39
37	மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)	7,99,14	—	—
38	பொதுத் துறை	21,36,83	1	1,75,24
39	கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)	15	27	19,50
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	16	56	—
41	வருவாய்த் துறை	61	—	43,70
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	23	4	11,34
43	பள்ளிக் கல்வித் துறை	40	2	—
44	குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை	12	3,26,96	8,00
45	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை	40	1	24,99

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
46	தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	2,54,68	—	39,98
47	இந்துசமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)	3	—	—
48	போக்குவரத்துத் துறை	82,61	25,13,18	—
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	5,92,75	—	—
50	ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	16	—	—
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	248,82,61	—	361,54,15
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	46,85,40	4,38,00	—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
53	சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை	1	—	19,29
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	56,72,85	10	—
	பெருமொத்தம்	**2,413,31,87**	**371,78,18**	**2,312,98,59**

6. அறிவிப்புகள்

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2012–2013, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2012–2013 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (2) of Article 205, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly, of the demands for further grants for the Financial Year 2012–2013."